www.ecourtsindia.com

<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>
<u>OS.No. 1134 / 2022</u>

வா.சா.1. முத்துக்குமார் 09.08.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

பொதுவாக ஒரு சொத்தை கிரையம் பெற வேண்டும் என்றால் வில்லங்கசான்று பெற்று அதை பார்வையிட்ட பின்பு தான் கிரையம் பெற வேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு நான் வில்லங்கசான்று பெற்று தான் கிரையம் பெற்றேன். அந்த வில்லங்கசான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் பன்ன முடியும். ஏற்கனவே இந்த சொத்தில் வில்லங்கம் இருப்பதை அறிந்து 1-ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து சதி செய்து தாவா சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் தவறு. நான் 18.10.2013-ம் தேதி கிரையம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் பழனி சார்பு நீதிமன்றத்தால் கந்தசாமி என்பவருக்கு கிரையம் செய்த கிரையப்பத்திரத்தை நான் சான்றாக பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் கிரையம் பெறுவதற்கு முன்பே 13.09.2010-ம் தேதிய தீர்ப்பின் அடிப்படையில் பழனி சார்பு நீதிமன்றம் 27.06.2003-ம் தேதி ஆவண எண்.1118/2003 ஆக பதியபட்டதற்கு பின்னிட்டு தான் நான் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறும் பொழுது தாவா சொத்தில் எந்த வில்லங்கமும் இல்லை வழக்கு மூலமும் இல்லை. தாவா சொத்துக்கு நான் உண்மையான கிரையதாரர். 1-ம் பிரதிவாதிக்கு எந்தவித தொகையும் கொடுக்காமல் 1-ம் பிரதிவாதியிடம் சேர்ந்து கொண்டு 2, 3 பிரதிவாதிகளை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் என் பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து மலரணையாக ஏற்படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆனால் நான் பணம் கொடுத்து தான் கிரையம் வாங்கினேன். எனது பெயருக்கு பட்டாவும் மாற்றப்பட்டது. என் பெயருக்கு வழங்கப்பட்டா பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். பட்டாவை ரத்து செய்தது சரியான செயல் தான் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG190039132022/truecopy/order-2.pdf

4552 நாட்கள் காலதாமத்தின் பேரில் 1-ம் பிரதிவாதி அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்வதற்கு ஏற்பட்ட காலதாமத்ததை மன்னித்து உத்தரவிடவேண்டி மனு தாக்கல் செய்து அந்த மனு 25.04.2016-ம் தேதி தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. அதில் நான் தரப்பினரும் அல்ல. 1-ம் பிரதிவாதி பழனி சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சீராய்வு மனு தாக்கல் செய்து 22.01.2018-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீண்டும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து காலதமாதத்தை மன்னிக்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் மனு தாக்கல் செய்யப்பட்ட அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மீண்டும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்து அந்த மனுவும் 03.05.2019-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீண்டும் பழனி சார்பு நீதிமன்றத்தில் இடைக்கால மனு எண்.146/2020 தாக்கல் செய்யப்பட்டு முழுவிசாரணைக்கு பின்னிட்டு பழனி சார்பு நீதிமன்றத்தால் 03.03.2020-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் மனு தாக்கல் செய்துள்ளதாக என்னிடம் சொன்னார். அவர் நீதிமன்றத்திற்கு செல்லாத காரணத்தினால்அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னார்.அந்த உத்தரவுகளின் அடிப்படையில் எனக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற தேதியில் எந்தவித வில்லங்கமும் இல்லை. நான் தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்து வருவாய்துறை ஆவணங்களை பார்த்து எவ்வித வில்லங்கமும் இல்லாத காரணத்தினால் தான் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றும் அதன்படி நான் நல்லெண்ண கிரையதாரர் என்று வழக்குரையில் சொல்லியுள்ளது உண்மைக்கு மாறான சங்கதி என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளை அழைக்கழித்து அவர்களுக்கு கஷ்டத்தை கொடுக்க வேண்டும் என்று 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து நான் மலரணையாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பழனி வருவாய் கோட்டாட்சியர்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG190039132022/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

உத்தரவை எதிர்த்து நான் திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளேன் என்று நான் எனது பிராதிலும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்குண்டான ஆவணத்தை எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டை எண்களை சொல்ல முடியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் கிடையாது என்றும் மனுச் சொத்தின் சுவாதீனம் 2, 3 பிரதிவாதிகளிடம் தான் இருந்து வருகிறது என்றும் வழக்கிற்காக மனுச் சொத்தின் சுவாதீனம் என்னிடம் உள்ளது என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு தெரியாமல் நான் பட்டா வாங்கியதால் தான் என் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லாத சொத்தை எனக்கு பாத்தியம் என்று சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியும் நானும் கூட்டு சேர்ந்து இந்த தாவா சொத்தை எனது பெயருக்கு கிரையம் ஏற்படுத்தி வைத்ததால் தான் 1-ம் பிரதிவாதி இந்த வழக்கில் வேண்டுமென்றே மறைந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்தால் தாவா சொத்து குறித்து உண்மை நிலை தெரியும் என்பதால் 1ம் பிரதிவாதி வராமலே நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த தாவாவில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.08.12 18:07:38 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNDG190039132022/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com